# பயணியர் அதிகரிப்பு



**சென்னை, ஜூலை 15–**

இரண்டு நாட்களில், தலா, ஒரு லட்சம் பேர், மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது. இந்த ரயில் களில் தினமும், 87 ஆயிரத் தில் இருந்து, 99 ஆயிரம் பயணியர் வரை, பயணம் செய்கின்றனர்.

விரைவான, பாதுகாப் பான, சொகுசு பயணம் செய்ய முடிவதால், பயணியர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், இம் மாதம், 1ம் தேதி, 1.06 லட்சம் பேர் பயணம் செய்தனர். நேற்று முன் தினம், 1.07 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.